பக்கங்கள்: 10
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 23 செவ்வாய்க்கிழமை 09.11.2021 கதிர் 232

## சிலாபம் வாவியில் இன்று 19 பேர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.09

புத்தளம் மாவட்டம் சிலாபம் வாவிப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 19 பேர் இன்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 2

# குடாநாடு வெள்ளத்தில்; 20 ஆயிரம் பேர் பாதிப்பு

## பாடசாலைகளுக்கு இன்றும் நாளையும் விடுமுறை





(இ.கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றிரவு முதல் பெய்து வரும் அடைமழை காரணமாக மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் 5 ஆயிரத்து 908 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 987 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளுக்கு இன்றும் நாளையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. 2



## கோட்டா – இப்ராஹிம் இன்று நேரில் சந்திப்பு

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் சாலிஹ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மாலைதீவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் அஹமட் கலீல், மாலைதீவு ஜனாதிபதி அலுவல 2

## மண்சரிவில் சிக்குண்டு தாய், இரு மகள்மார் சாவு

### தந்தை அவசர சிகிச்சைப் பிரிவில்





கேகாலை ரம்புக்கன்ன, உடகலதெனிய பகுதியில் இன்று ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளமையுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தாயும், 8 மற்றும் 14 வயதான அவரது இரு மகள்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தந்தை படுகாயமடைந்து கேகாலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். 2

## கிளிநொச்சி, மன்னார் பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிப்பு

(நா.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. 2

## வாகன விபத்தில் இருவர் மரணம்!

கிளிநொச்சி, ஏ-9 வீதி பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் பலியாகியுள்ளனர். 2

## யாழ். ரயிலில் திடீரெனத் தீ!

### தாண்டிக்குளத்தில் சம்பவம்

யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் வவுனியாவை அண்மித்த போது திடீரெனத் தீ ஏற்பட்ட நிலையில் ரயில் ஊழியர்கள் விரைந்து செயற்பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். 2

## மற்றுமொரு மண்சரிவில் தாதி பரிதாப உயிரிழப்பு




குருநாகல் மாவட்டம், நாரம்மல வென்னோருவ பகுதியிலுள்ள வீடொன்றின் மீது இன்று அதிகாலை மண்மேடு சரிந்து வீழ்ந்ததில், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றும் 23 வயதான யுவதி மரணமடைந்துள்ளார்.

வீட்டிலிருந்த தாய், மகன் ஆகிய இருவரும் தப்பியுள்ளனர். மண்சரிவுக்குள் சிக்கி 2

## கொழும்பு நகரைச் சேர்ந்த மூன்று சிறுமிகள் மாயம்!

### பொலிஸில் பெற்றோர் முறைப்பாடு



கொழும்பு - 12 பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று சிறுமிகள் காணாமல்போயுள்ளனர் என்றுபெற்றோர்கள்முறைப்பாடு செய்துள்ளனர் என்று 2

## சீரற்ற காலநிலையால் இதுவரை 11 பேர் சாவு

நாட்டில் கடந்த சில நாள்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் 16 மாவட்டங்களில் 78 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இன்று தெரிவித்துள்ளது.

வெள்ளம், மண்சரிவு மற்றும் மின்னல் தாக்கத்தால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், ஐவர் காயமடைந்துள்ளனர் எனவும் மேற்படி மத்திய நிலையம் சுட்டிக்காட்டி 2

## சம்பள முரண்பாட்டுக்கு உரிய தீர்வு கோரி அதிபர் – ஆசிரியர்கள் பெரும் போராட்டம்!



தேசிய எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு அதிபர் - ஆசிரியர் ஒன்றிணைந்த சங்கத்தால் இன்று நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், அதிபர் – ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிமாபெரும்ஆர்ப்பாட்டப் பேரணி ஹற்றனில் இடம்பெற்றது. 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சம்பள முரண்பாட்டுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பிற்பகல் 3 மணியளவில் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டப் பேரணியையடுத்து பொலிஸார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மல்லியப்பு சந்தியிலிருந்து ஆரம்பமாகிய பேரணி பிரதான வீதியூடாக ஹற்றன் மணிக்கூண்டு வழியாக பிரதான பஸ் தரிப்பிடம் வரை வந்தது. அங்கு அதிபர் - ஆசிரியர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர் - ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் நீண்டகாலக் கோரிக்கையான அதிபர் - ஆசிரியர்களின் கொடுப்பனவை வழங்கக் கோரியும், கல்வித்துறையிலுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறுத்தரக் கோரியும் கோஷம் எழுப்பப்பட்டது.

## கோட்டா - இப்ராஹிம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின் வெளிவிவகார செயலாளர் இப்ராஹிம் ஹுீட், இலங்கைக்கான மாலைதீவு தூதுவர் உமர் அப்துல் ரசாக் மற்றும் இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## மண்சரிவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மண்சரிவால் குறித்த குடும்பத்தின் வீடு முற்றாக மண்ணில் புதையுண்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## சிலாபம் வாவியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலாபம் புகத்துவாரத்தை அண்டிய பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் ஓர் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது அதனை சோதனை செய்த கடற்படையினர் 19 பேரைக் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 16 ஆண்கள், 3 சிறுவர்கள், ஒரு பெண் என 19 பேர் காணப்பட்டனர். வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு , வத்தளை, நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கிளிநொச்சி, மன்னார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி நாளை கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட அரச அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரு மாவட்டங்களிலும் இன்று பாடசாலைகள் நடைபெற்ற போதிலும், மாணவர்கள் நேர காலத்தோடு வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் எனவும் மாவட்ட அரச அதிபர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, வெள்ளப் பாதிப்பால் யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகளுக்கு இன்றும் நாளையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மற்றுமொரு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த மகள், வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

## கொழும்பு நகரைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழைத்தோட்டம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓட்டோவில் நேற்றுக் காலை 8 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற குறித்த மூன்று சிறுமிகளும் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும், அவர்கள் சம்பந்தமாக எந்தத் தகவலும் வீட்டுக்குக் கிடைக்கவில்லை எனவும் அவர்களின் பெற்றோர் வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் நேற்று மாலை செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரிகளும், அவர்களின் உறவினர் முறை சகோதரியான சிறுமியுமே இவ்வாறு காணாமல்போயுள்ளனர்.

இவர்கள் மூவரும் 13 முதல் 15 வயதுக்குட்பட்டவர்களாவர்.

குறித்த மூன்று சிறுமிகளும் நேற்று முற்பகல் கொழும்பு விகாரமஹாதேவி பூங்கா மற்றும் காலிமுகத்திடல் பகுதிகளில் காணப்பட்டுள்ளனர் என்று அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து வாழைத்தோட்டம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாகன விபத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ம. யூட்பவின் (வயது 29), ச.காந்தீபன் (வயது 34) ஆகிய இருவருமே சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியில் மோட்டார் சைக்களில் மோதுண்டதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். ரயிலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து இன்று பிற்பகல் கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயில் தாண்டிக்குளத்தை அண்மித்த போது ரயில் கொட்பொக்ஸ் பகுதியில் திடீரெனத் தீ பிடித்துள்ளது.

இதனை அவதானித்த ரயில்வே ஊழியர்கள் விரைந்து செயற்பட்டு தீயணைக்கும் பம்பியை செயற்படுத்தி தீயிணைக் கட்டுக்குள் கொண்டு வந்து அதனை அணைத்தனர்.

இதனையடுத்து ரயிலின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், சுமார் ஒரு மணித்தியால தாமதத்தின் பின் குறித்த ரயில் கொழும்பு நோக்கித் தனது பயணத்தைத் தொடர்ந்தது.

## சீரற்ற காலநிலையால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது.

அடுத்த 48 மணிநேரத்துக்கு இதே காலநிலை நீடிக்கும் என்பதால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கோரப்பட்டுள்ளனர்.

## குடாநாடு வெள்ளத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 65 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிவரையிலான பாதிப்பு தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு முதல் பெய்த மழை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்து 908 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 987 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்தத் தரவுகள் கிடைத்துள்ளன.

131 குடும்பங்களைச் சேர்ந்த 438 நபர்கள் மாத்திரமே வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அடைமழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பால் யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநருடன் ஆலோசித்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## ஆக்கிரமிப்பை முறியடிப்போம்

**இந்த முழு இலங்கைத் தீவும் பௌத்த, சிங்கள தேசத்துக்கு மட்டுமே உரியது என்று தனி பாந்திய உரிமை கொண்டாடும் தென்னிலங்கைப் பேரின வாதம், அதன் காரணமாக இந்தத் தீவின் வடக்கிலும் கிழக்கிலும் காலம் காலமாக நிலை கொண்டிருக்கும் தமிழர் தேசத்தை மறுதலித்து நிற்கின்றது.**

**தனியான மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள், பண்பியல் கோலங்கள், வழக்காறுகளுடன் புவியியல் ரீதியாக ஒன்றுபட்ட ஒரு பூர்வீக தாயகத்தில் பரந்து வாழும் தமிழர் தேசத்தின் இருப்பையும் உரிமையையும் அதன் காரணமாக பௌத்த, சிங்கள தேசம் நிராகரித்து நிற்கின்றது இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தின் உரித்தை அடியோடு புறந்தள்ளி நிற்கும் பௌத்த சிங்களப் பேரினவாதம் அதன் காரணமாகத் தமிழர் தாயகத்தின் தனித்துவ கட்டமைப்புக்களை சிதைத்தழித்து நிர்மூலமாக்கக் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது. தமிழர் தேசத்தின் இருப்பின் அடையாளத்தையே இல்லாதொழித்தால், இந்தத் தீவு பௌத்த, சிங்களவருக்கு மட்டுமே என்ற தன்னுடைய தனித்துவ உரிமையை நிலைநாட்டி விடலாம் என்று அது நம்புகின்றது; கனவு காண்கின்றது.**

**அதனால் அப்படி தமிழர் தேசத்தை நிர்மூலமாக்கும் சதிவலைத் திட்டத்தையே சுதந்திரத்தின் பின் வந்த ஒவ்வொரு பௌத்த, சிங்களப் பேரினவாத அரசும் கட்டவிழ்த்து வந்துள்ளது.**

**தமிழர்கள் இந்தத் தீவில் ஒரு தனி தேசமாக – தேசியமாக – நிலைபெற்று நிமிர்ந்து நிற்பதற்கு, எவை எவை எல்லாம் அத்திவாரமோ அவையவற்றையெல்லாம் இலக்கு வைத்து, சின்னாபின்ன மாக்கி, முழுமையாகத் தகர்த்து, அடையாளமே இல்லாமல் ஒழிப்பதுதான் பேரினவாதத்தின் இந்த நாசகார திட்டத்தின் சூட்சுமமாகும்.**

**தமிழர்களின் மொழி உரிமை, கல்வி உரிமை, வேலை வாய்ப்புரிமை, ஓர் இனமாகச் செயற்படுவதற்கான பண்பாட்டு உரிமை, ஒரு தேசமாக வாழ்வதற்கான நில உரிமை என எல்லாமே இலக்கு வைத்து அழிக்கப்படுகின்றன. ஒட்டு மொத்தத்தில் இந்தத் தீவில் தமிழினத்தின் அடையாளத்தை இல்லாதொழிப்பதுதான் இச்செயற்பாட்டின் நோக்கம். இந்தத் தீவில் எண்ணிக்கை ரீதியில் பேரினம் என்ற தகுதியை – வலிமையை – வைத்துக்கொண்டு இந்த அராஜகத்தை கட்டவிழ்க்கின்றது பேரினவாதம்.**

**இப்படி தமிழர் தேசத்தைச் சிதைத்தழிப்பதில் முக்கிய தந்திரோபாயமாக தமிழர் தேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைப் பெரிய அளவில் வல்வந்தமாக ஏற்படுத்தி, இனப்பரம்பல் விகிதாசாரத்தையே தலைகீழாக மாற்றி, அப்பிரதேசத்தின் மீதான தமிழரின் தனித்துவ உரிமையை இல்லதொழிக்கும் இத்திட்டம் முன்னெடுக்கப் படுகின் றது. நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து மாறி மாறி வந்த அரசுகள் இதனை ஒரு தேசிய கொள்கையாக வகுத்துக்கொண்டு மூர்க்கத்துடன் அதனை பின்பற்றி செயற்படுத்தி வந்தன.**

**இதனால் இலங்கைத் தீவின் கிழக்கில் காலங்காலமாக நிலைத்திருந்த தமிழர் தேசம், இலங்கைப் பேரினவாதத் தினால் கபளீகரம் செய்யப்பட்டு, இன்று அது குறுகி விட்டது. இப்போது அந்த மிலேச்சத்தனம் வடக்கை நோக்கி பெருமெடுப்பில் ஏவி விடப்படுகின்றது. அதன் உச்சமாக வவுனியாவில் இப்போது படு மூர்க்கமாக அது அரங்கேறுகின்றது. வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் இது தொடர்பாக முழு விவரங்களுடன் வெளியிட்டுள்ள அறிக்கை தனியாக பிரசுரமாகி உள்ளது.**

**பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கொடுங்கோல் கரங்களை – மிலேச்சத்தனமான மேலாண்மை போக்குடைய ஆக்கிரமிப்பு அட்டகாசத்தை – அது அம்பலப்படுத்தி நிற்கின்றது.**

**பேரினவாதம் இன ஆக்கிரமிப்பாக மேற்கொள்ளும் இத்தகைய மேலாதிக்கப் பயங்கரவாதத்தை முறியடிக்க வரும் திங்களன்று நெடுங்கேணியில் தமிழர் தரப்பு நடத்தும் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஆதரவு தந்து, இந்த கொடூரத்திற்கு எதிராகத் தங்கள் எதிர்ப்பை உணர்வுரீதியாக உலகுக்கு வெளிப்படுத்துவது அவசியமாகும்.**



## நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சங்கானையில் 38 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் நேற்று(திங்கட் கிழமை) இரவு முதல் பெய்து வரும் அதிக மழைவீழ்ச்சி காரணமாக சங்கானை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 38 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

சங்கானை பிரதேச செயலகப் பிரிவின் ஜே - 179 கிராம சேவகர் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 4 குடும்பத்தினர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தாக்கம் காரணமாக 200 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நாட்டில் சீரற்ற காலநிலை நிலவுவதால் தேவையற்ற பயணங்களை தவிர்க்குக!

### அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிப்பு

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக காடுகளுக்கு சுற்றுலாப் பயணம் செல்லுதல், மலையேறுதல், ஆற்றில் நீராடுதல், படகு சவாரி செய்தல் உள்ளிட்ட தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பை மீறி சட்டவிரோதமான பயணங்களை மேற்கொண்டு ஏனையவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அனர்த்த நிலைமை மற்றும் கொரோனா பரவலைக் கருத்திற் கொண்டு தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் பரவலாக கனத்த மழை குளங்களின் நீர் மட்டங்கள் உயர்ந்தன

கிளிநொச்சி மாவட்டத்திலும் பரவலாக கனத்த மழை பெய்து வருகின்றது. இந்த நிலையில் கனகாம்பிகைக்குளம், வன்னேரிக் குளம் ஆகியன வான் மட்டத்தை அடைந்து வான்பாய்ந்து வருகின்றன.

கடந்த சில நாள்களாக பெய்து வந்த மழை காரணமாக கனகாம்பிகைக்குளம் வான் பாய ஆரம்பித்தது. இந்த நிலைமையில் நேற்று இரவு முதல் பெய்த பலத்த மழை காரணமாக வன்னேரிக்குளம் இன்று (செவ்வாய்க் கிழமை) வான்பாய ஆரம்பித்துள்ளது.

தொடர் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. இந்த நிலையில் குளங்களுக்கு நீர்வருகை அதிகரித்துள்ளது.

இன்று காலை 7 மணி வாசிப்பின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்துக்கான நீர்ப்பாசன குளமான 36 அடி அடைவுமட்டம் கொண்ட இரணைமடுக்குளம் 24 அடி இரண்டு அங்குலமாக உயர்ந்துள்ளது. 26 அடி அடைவுமட்டம் கொண்ட கல்மடு குளம் 24 அடி மூன்று அங்குலமாகவும், 12 அடி அடைவுமட்டம் கொண்ட பிரமந்தனாறு குளம் 9 அடி ஓர் அங்குலமாகவும் அதிகரித்துள்ளது. 19 அடி அடைவுமட்டம் கொண்ட புதுமுறிப்பு குளம் 17 அடி ஐந்து அங்குலமாகவும், 25 அடி அடைவுமட்டம் கொண்ட அக்கராயன்குளம் 18 அடி மூன்று அங்குலமாகவும், 10 அடைவு மட்டம் கொண்ட கரியாலை நாகபடுவான் குளம் 4 அடி 8 அங்குலமாகவும், 8 அடி ஆறு அங்குலம் அடைவு மட்டம் கொண்ட குடமுருட்டி குளம் 6 அடி ஒன்பது அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

இதேவேளை, 10 அடி ஆறு அங்குலம் கொள்ளளவு கொண்ட கனகாம்பிகைக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 5 புள்ளி ஐந்து அங்குலம் வான் பாய்ந்து வருவதுடன், 9 அடி ஆறு அங்குலம் அடைவுமட்டம் கொண்ட வன்னேரிக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 3 அங்குலம் வான் பாய்ந்து வருகின்றது.

நீர் நிலைகளுக்கான நீர்வருகை தொடர்ந்தும் காணப்படுவதாலும், மாவட்டத்துக்கு மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் தொடர்ந்தும் இருக்கின்றமை தொடர்பில் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ள நிலையில் மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

இந்த நிலையில், நீர்நிலைகள், நீர் வடிந்தோடும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறும், தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராம சேவையாளர் ஊடாக அல்லது, பாதுகாப்புத் தரப்பினர் ஊடாக பாதுகாப்பை பெற்றுக் கொள்ளுமாறும், மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

## 56 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றனர்

நாட்டில் இதுவரையில், 56 ஆயிரத்து 252 பேருக்கு தடுப்பூசியின் மூன்றாவது டோஸான பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே நேரம், நாட்டில் நேற்றைய தினம் மாத்திரம் 6 ஆயிரத்து 721 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அதில் 2 ஆயிரத்து 191 பைஸர் தடுப்பூசிகள் மூன்றாவது டோஸாக செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உரிமைகளுக்காக ஆப்கான் பெண்கள் போராட்டம்!




ஆப்கானிஸ்தான் பெண்கள் தமது உரிமைகளை பயன்படுத்துவதில் வரையறைகள் இருக்கின்றன என தெரிவித்து தலைநகர் காபூலில் எதிர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நிறுவனங்கள் உட்பட சர்வதேச தரப்பினர் இந்த விடயத்தில் மௌனமாக இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டு விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பெண்கள், இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், பெண்கள் பள்ளிவாசல்களுக்கு செல்வதற்கும், பெண்கள் தங்கள் வேலைகளுக்குத் திரும்புவதற்கும் வழி வகுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளனர்.

'ஆப்கானிஸ்தானின் நிலைமை குறித்து சர்வதேச சமூகத்தின் மௌனத்திற்கு எதிராக எங்கள் குரலை எழுப்புவதற்கு நாங்கள் இங்கு வந்துள்ளோம்' என்று போராட்டத்தில் பங்கேற்ற அரிபா பாத்திமி கூறினார். 'ஆப்கானிஸ்தானின் மக்கள் தொகை யில் அரைப்பங்கினர் அகற்றப்பட்டுள்ளனர். நாங்கள் எங்கள் உரிமைகளை இழந்துவிட்டோம். இந்த நிலைமை தொடர்வது ஆபத்தானது' என்று மற்றொரு போராட்டக்காரரான மர்ஜான் அமிரி கூறினார்.

இதேவேளை, பல பெண்கள் உரிமை ஆர்வலர்கள் ஷரியா சட்டத்தின் அடிப்படையில், பெண்களுக்கு கல்வி மற்றும் தொழில் செய்வதற்கான உரிமை உள்ளது என்றும், இது தொடர்பாக சர்வதேச சமூகம் அமைதியாக இருக்க வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளனர். 'சர்வதேச சமூகம் தமது நிலைப்பாடுகளை வெளியிட்டு நடவடிக்கை எடுத்தால், பெண்களுக்கு அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதில் உள்ள வரையறை களை நீக்க முடியும்' என் பெண் உரிமை ஆர்வலர் சர்க்கா யாப்தலி கூறினார்.

ஆப்கானிஸ்தானின் சுதந்திர மனித உரிமைகள் ஆணையகத்தின் முன்னாள் ஆணையாளர் பெஹேஷ்தா யாகூபி, 'இஸ்லாமிய எமிரேட் உலகத்துடன் தொடர்புகளை பேணுவதற்கு விரும்பினால், அது பெண்களின் உரிமைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்றார். 'ஆப்கான் அரசாங்கம் உலகத்துடன் தொடர்பு கொள்ள விரும்பினால், அது மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்களை மதிக்க கடமைப்பட்டுள்ளது' என்று யாகூபி கூறினார். இஸ்லாமிய சட்டத்தின் கீழ் பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புக்களை வழங்குவதாக இஸ்லாமிய எமிரேட் பலமுறை கூறியிருந்தாலும் காபூலில் தற்போது வரையில் போராட்டங்கள் தொடர்கின்றன.

# ஹோர்மஸ் நீரிணைக்கு அருகே ஈரான் வருடாந்திர போர் ஒத்திகை

அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்மஸ் நீரிணைக்கு அருகே, ஈரான் தனது வருடாந்திர போர் ஒத்திகையைத் தொடங்கியுள்ளது.

ஈரானும், ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் அணு ஆயுத தவிர்ப்பு தொடர்பாக வியன்னாவில் எதிர்வரும் 29ஆம் திகதி நேரடி பேச்சில் ஈடுபடவுள்ள நிலையில், இந்த போர் ஒத்திகையை தொடங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான போர் ஒத்திகை, எத்தனை நாட்கள் நடைபெறும் என்பது குறித்து அறிவிக் கப்படவில்லை. கமாண் டோக்கள் மற்றும் வான்வழி காலாட்படை உள்ளிட்ட படைப்பிரிவுகள் வருடாந்திர பயிற்சிக் காக பயன்படுத்தப்பட்டன என அரச தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.

இதில் போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், இராணுவ போக்குவரத்து விமானம், நீர்மூழ்கிக் கப்பல்கள், ஆளில்லா விமானங்கள் இடம்பெற்றுள்ளன. ஓமன் வளைகுடாவின் கடலோரப் பகுதியில் ஹார்முஸ் ஜல சந்தியின் கிழக்கே 386,100 சதுர மைல்கள் (1 மில்லியன் சதுர கிலோ மீற்றர்) பரப்ப ளவில் கடற்படை மற்றும் விமானப் படை பிரிவுகள் மற்றும் தரைப்படைகள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

'சோல்பாகர் – 1400' என அழைக்கப்படும் இந்த போர் ஒத்திகை, வெளிநாட்டு அச்சுறுத்தல்கள் மற்றும் சாத்தியமான படையெடுப்பை எதிர்கொள்வதில் தயார்நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

மொத்த எண்ணெய்க் கப்பல்களில் கிட்டத்தட்ட 20 சதவீதம் ஓமன் வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலுக்கு நீரிணை வழியாக செல்கிறது.

சர்வதேச வர்த்தக வழித்தடமாகப் பயன்படும் இந்தப் பகுதியில்தான், அண்மையில் அமெரிக்கா தனது பி-1பி லான்சர் ரக குண்டுவீச்சு விமானத்தைப் பறக்கச் செய்தது நினைவுகூரத்தக்கது





# போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் மீது சூடானில் பாதுகாப்புப் படையினர் தாக்குதல்

சூடானில் ஆட்சிக்கவிழ்ப்பு எதிர்ப்பு பேரணிகளில் கலந்துகொண்டவர்கள் மீது, சூடானின் பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். தலைநகர் கார்ட்டூம் மற்றும் ஓம்டுர்மன், தெற்கே வாட் மதனி மற்றும் வடக்கு நகரமான அட்பரா ஆகிய இடங்களில் ஜனநாயகத்துக்கு ஆதரவான பேரணிகள் இடம்பெற்றன.

இந்த போராட்டத்தினை கலைக்க முற்பட்ட பாதுகாப்பு படையினர், பேரணிகளில் கலந்துக் கொண்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். அத்துடன் இந்த பேரணிகளில் பொலிஸாரை தாக்க முயன்றனர் எனக் கூறி டஷின் கணக்கானவர்களை பாதுகாப்பு படையினர் கைது செய்தனர்.

சூடானில் நிலவும் பிரச்சினையைத் தீர்க்க, அரபு லீக் மத்தியஸ்தர்கள் கார்ட்டூம் நகருக்கு வந்து சேர்ந்த நிலையில், இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. போராட்டக்காரர்கள், இராணுவ ஆட்சி பின்வாங்கப்பட்டு, அமைதியான முறையில் குடிமை ஆட்சி அனுமதிக்கப்பட வேண்டும் என கோரி வருகின்றனர். ஆசிரியர்கள் பங்கெடுத்த ஒரு போராட்டம் பாதுகாப்பு படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, பல நகரங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இரண்டு நாள்கள் சிவில் ஒத்துழையாமை மற்றும் கடந்த மாதம் இராணுவம் கையகப்படுத்தப்பட்டதற்கு எதிராக வேலை நிறுத்தப் பிரச்சாரத்திற்கு அழைப்பு விடுத்தனர். ஜெனரல் அப்தெல் பத்தா அல் புர்ஹான் தலைமையிலான சூடான் இராணுவம், ஒக்ரோபர் 25ஆம் திகதி அதிகாரத்தைக் கைப்பற்றியது. இடைக்கால நிர்வாகத்தை கலைத்து, டஷின் கணக்கான அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை கைது செய்தது.

இது ஏற்கனவே அமைதியற்ற ஆபிரிக்கா பிராந்தியத்தை மேலும் சீர்குலைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. ஒக்ரோபர் 25ஆம் திகதி ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பின்னர் ஜனநாயக ஆதரவுப் போராட்டங்கள் நடைபெற்றன. சூடானிய மருத்துவர்களின் சுயாதீன மத்தியக் குழுவின் கூற்றுப்படி, குறைந்தது 14 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் சுமார் 300பேர் காயமடைந்துள்ளனர்.

# ஈராக் பிரதமர் வீட்டின் மீது ஆளில்லா விமான தாக்குதல்; ஏழு பேர் காயம்!



ஈராக் பிரதமர் முஸ்தபா அல் காதிமி, பாக்தாத்தின் உயர் பாதுகாப்பு பசுமை மண்டலத்தில் உள்ள அவரது வீட்டின் மீது ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் காயமின்றி தப்பினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைநகர் பாக்தாத்தில் உயர் பாதுகாப்பு நிறைந்த பசுமை மண்டல பகுதியில் அதிகாலை இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளை ஈரான் ஆதரவு போராளிகள் ஏற்க மறுத்தமையால் ஏற்பட்ட பதற்றத்துக்கு மத்தியில் பிரதமர் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகம், முக்கிய தலைவர்களின் வீடுகள் உள்ளப் பகுதியில், நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் பாதுகாப்பு படை வீரர்கள் 7 பேர் காயமடைந்தனர்.

இதனிடையே இந்த தாக்குதலுக்கு ஐ.நா.சபை பொது செயலாளர் அண்டோனியோ குட்டரெஸ், அமெரிக்க ஜனாபதி ஜோ பைடன் மற்றும் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உள்ளிட்ட தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து உட்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜெனரல் சாத் மான் கூறுகையில், இரண்டு ஆயுத மேந்திய ஆளில்லா விமானங்கள் மட்டுமே படுகொலை முயற்சியில் ஈடுபட்டன எனவும் அவை பாக்தாத்தின் வடகிழக்கில் 12 கிலோமீற்றர் தொலைவில் இருந்து ஏவப்பட்டன எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.



# தமிழ்ப்பேரினத்தின் பிள்ளைகள் நெஞ்சுரத்தை இழக்கக்கூடாது!

## நீட் தேர்வுத் தற்கொலைகள் குறித்து சீமான் அறிக்கை

தொடரும்மாணவர்தற்கொலையைத் தடுக்க, இனியும் காலங்கடத்தாமல் நீட் தேர்வை நீக்க உறுதியான நடவடிக்கையை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும், என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நீட் எனும் கொலைக்கருவிக்குப் பலியாகும் இளந்தளிர்களின் மரணம் தொடர்கதையாகி வருவது பெருங்கவலையை தருகிறது. 2017 ஆம் ஆண்டு அனிதாவில் தொடங்கி, 2018 இல் இரண்டு பேர், 2019 ஆம் ஆண்டு 4 பேர், 2020 ஆம் ஆண்டு 5 பேர், இந்த ஆண்டு தனுஷ், கனிமொழி, சௌந்தர்யா, தற்போது தம்பி சுபாஷ் உட்பட 4 பேர் என இதுவரை 16 க்கும் மேற்பட்ட பிஞ்சுப்பிள்ளைகளின் மரணங்கள் பெரும் ரணத்தையும், தாங்கவியலா வேதனையையும் அளிக்கிறது. மருத்துவராக ஆசைப்பட்ட பிஞ்சுப்பிள்ளைகளின் கனவைக் கருக்கி, அவர்களது உயிரைக் குடித்திடும் ஆளும் வர்க்கத்தின் ஈவிரக்கமற்ற இச்செயல் அரசபயங்கரவாதத்தின் உச்சமாகும். இத்தகைய துயர் மிகு சூழலில் இழைக்கப்படும் அநீதியைக் கண்டு ஆற்றாமையும், அடக்கவியலா பெருங்கோபமும் நெஞ்சில் எழுகிறது.

நீட் தேர்வின் விளைவாக உயிரிழக்கும் தம்பி, தங்கைகளின் மரணம் என்பது தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொள்கிற தற்கொலை அல்ல! அவை ஒன்றிய, மாநில அரசுகள் சேர்ந்து செய்யும் பச்சைப்படுகொலையாகும்.

தமிழர்களுக்கெதிரான ஒன்றிய அரசின் நயவஞ்சகத்தனமும், அதற்கு ஒத்திசைந்துபோகும் திராவிட அரசுகளின் கையாலாகத்தனமுமே இத்தனை பேரின் உயிரைப் போக்கியிருக்கிறது. நீட் தேர்வில் தோல்வியுற்றதற்காகவோ, அதனை எதிர்கொள்ள முடியாததினாலோ உயிரைவிடும் எண்ணத்தை எனதருமைத் தம்பி, தங்கைகள் கைவிட வேண்டும். போர்க்குணமும், போராட்ட உணர்வும் நிரம்பப் பெற்றிருக்கிற தமிழ்ப்பேரினத்தின் பிள்ளைகள் ஒருபோதும் நெஞ்சுரத்தையும், துணிவையும் இழக்கக்கூடாது என உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஆம் ஆண்டுத் தங்கை அனிதாவின் பேரிழப்பிற்குப் பிறகு, தமிழகம் கிளர்ந்தெழுந்து ஒற்றைக் குரலில் ஒருமித்துக் குரலெழுப்பியப் பிறகு, கொடுக்கப்பட்ட அரசியல் அழுத்தத்தின் விளைவாக, தமிழக அரசு நீட் தேர்விலிருந்து விலக்குக்கோரி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று ஆண்டுகளைக் கடந்தும் ஒன்றிய அரசு அதற்கு ஒப்புதல் தரவில்லை. அதன்பிறகு தாங்கள் ஆட்சி வந்தவுடனே நீட்தேர்வை நீக்கிவிடுவோம் என்று வாக்குறுதியளித்து மாணவர்களையும் பெற்றோர்களையும் நம்பவைத்து தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசும், 'புதிய மொந்தையில், பழைய கள்' என்ற அளவில் மீண்டுமொரு வெற்றுத்தீர்மானம் நிறைவேற்றியதோடு தனது கடமையை முடித்துக்கொண்டது பெருத்த ஏமாற்றமளிக்கிறது. நீட் தேர்வை ரத்துச் செய்ய தங்களிடம் திட்டம் இருப்பதாக சொன்ன தி.மு.கவின் ரகசியத் திட்டம் என்னவானது? நீட் தேர்வு பாதிப்புகள் குறித்து நீதியரசர் ஏ.கே.ராஜன் ஆணையம் தந்த அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை என்ன? என்ற கேள்விகளுக்கு தி.மு.க. அரசு என்ன பதில் சொல்லப் போகிறது? நீட் தேர்வினால் அடுத்தடுத்து நிகழும் பிள்ளைகளின் மரணங்கள் அத்தேர்வு முறையின் கோரமுகத்தை தொடர்ந்து அம்பலப்படுத்துகின்றன. அத்தேர்வு முறை இனியும் தொடர அனுமதித்தால் ஒவ்வோராண்டும் தமிழக மாணவச்செல்வங்களை இழக்க நேரிடும் பேராபத்து நிறைந்திருக்கிறது.

ஆகவே நீட் தேர்வால் இனியொரு உயிரோ, ஒரு மாணவரின் மருத்துவக் கனவோ பறிபோகக்கூடாது என்பதில் இனியேனும் தமிழக அரசு விழிப்புடன் இருக்க வேண்டும். எனவே, உச்ச நீதிமன்றத்தின் ஐவர் அமர்வில் கிடப்பிலிருக்கிற நீட் தேர்வு குறித்தான மறுசீராய்வு வழக்கை விரைந்து விசாரிக்கக்கோரி மனு அளித்து தமிழக அரசு சட்டப் போராட்டம் செய்ய வேண்டும் எனவும் மத்திய அரசிற்கு அரசியல் அழுத்தம் தந்து நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கினைப் பெற்றுத்தர உடனடி நடவடிக்கைகளை முடுக்கிவிடவேண்டும் எனவும், ஒன்றிய அரசு அதற்கு ஒப்புதல் தருவதோடு மட்டுமல்லாது நீட் தேர்வையே மொத்தமாய் ரத்துச்செய்திட ஆணைப் பிறப்பிக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார்.

# மழைநீர் வடிகால் திட்டங்களில் பல கோடி ரூபா முறைகேடு

## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு



சென்னை கொளத்தூரில் மழை வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டும் பணிகள் முறையாக நடைபெறவில்லை. மழைநீர் வடிகால் அமைத்ததில் பல கோடி ரூபா முறைகேடு நடந்துள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

ஏற்கனவே ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை உருவாக்கி அதிலும் பல கோடி ரூபா மத்திய அரசின் நிதியை வாங்கி என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இதில் கமிஷன் வாங்கி பல கோடி ரூபா சம்பாதித்துள்ளனர். ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணிகள் முடிந்த பிறகு இதில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும். இதில் ஸ்மார்ட் சிட்டிக்கான ஒப்பந்தங்கள் எடுத்தவர்கள் மீதும் நிச்சயமாக நடவடிக்கை பாயும்.

உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த எஸ்.பி. வேலுமணி மீதான ஊழல் புகார் மீது உரிய விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். அ.தி.மு.க. ஆட்சியில் மழைநீர் வடிகால் பணிகள் செய்ததில் பல கோடி ரூபா முறைகேடு நடந்துள்ளது. அதுவும் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும், என்று தெரிவித்துள்ளார்.




# கொரோனாவால் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தமிழக அரசால் 50,000 ரூபா இழப்பீடு வழங்கப்படும்

தமிழ்நாட்டில் கொரோனாவால் 36,220 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், அவர்களின் குடும்பத்தினருக்கு உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி தலா 50,000 ரூபா இழப்பீடு வழங்கப்படும் எனவும் தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றைப் பேரிடராக அறிவித்து 500 நாள்களுக்கும் மேல் கடந்துவிட்ட நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு விதிகளின்படி உரிய இழப்பீட்டை வழங்கக் கோரி தொடரப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு வந்த போது, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி இழப்பீடு வழங்குவது தொடர்பாக வகுக்கப்பட்ட விதிகளின்படி இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. அப்போது நீதிபதிகள், மாநில அரசு எவ்வளவு இழப்பீடு வழங்கவுள்ளது எனக் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர், உச்ச நீதிமன்றத்தில் 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குவது என பல மாநிலங்கள் ஏற்றுக்கொண்டன எனவும், தமிழகத்தில் கொரோனா பாதித்து 36,220 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் அவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, 50 ஆயிரம் ரூபா இழப்பீட்டை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழகம் மற்றும் புதுச்சேரி அரசுகளுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். பிற மாநிலங்களில் கூடுதல் இழப்பீடு வழங்கியிருப்பதாக சுட்டிக்காட்டிய நீதிபதிகள், கூடுதலாக இழப்பீடு வழங்க எந்தத் தடையும் இல்லை எனவும், கூடுதலாக வழங்கும் திட்டங்களிருப்பின், அந்தத் தொகை குறித்து அடுத்த வாரம் தெரிவிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.



# பா.ஜ.கவுக்கு எதிராக கேள்வி எழுப்பினால் தேச விரோதியா? தெலங்கானா முதலமைச்சர் சந்திரசேகர ராவ் சீற்றம்

*பா.ஜ.கவுக்கு எதிராக கேள்வி எழுப்புபவர்கள் அனைவரும் நாட்டிற்கு எதிரானவர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள் என தெலங்கானா முதலமைச்சர் சந்திரசேகர ராவ் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக பேசிய அவர், "மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் நாட்டிற்கு எதிரானவர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள்.*

*அப்படியில்லா விட்டால் வருமானவரித் துறை அல்லது அமுலாக்கத்துறையிலிருந்து சோதனையை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. கடந்த 7 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சியில் இதுதான் அரங்கேறி வருகிறது.*

*அந்நிய நாடு ஆக்கிரமித்துள்ள இந்திய எல்லைகளை மத்திய அரசு பாதுகாக்கத் தவறிவிட்டது என நான் கூறினால், நான் தேசவிரோதியா? செஸ் வரியை மத்திய அரசு திரும்பப் பெற்றால், டீசல் மற்றும் பெற்றோல் விலை லீற்றருக்கு 69 மற்றும் 77 ரூபாவாகக் குறையும்.*

*யார் கூட்டினார்களோ, அவர்கள்தானே குறைக்கவேண்டும்? அதைவிட்டு மாநில அரசுகளைக் குறைக்கச்சொல்வது முட்டாள்தனமானது" என்று அவர் தெரிவித்துள்ளார்.*

# அரசை விட்டு வெளியேறியதன் பின் விமர்சியுங்கள் இல்லையேல் சலுகைகளுக்காக என நினைப்போம்!

## அரசின் பங்காளிகளுக்கு சாணக்கியன் அறிவுரை



அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்காமல் வெளியேறிதன் பின்னர் விமர்சியுங்கள் என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர் அரசாங்கத்திலிருந்து கொண்டு ஆளும் கட்சியினர் அரசாங்கத்தினை விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கத்திலிருந்து கொண்டு எதிர்க்கட்சிக்கான வேலையினை செய்ய முடியாது. அரசாங்கத்திலிருந்து வெளியேறியதன் பின்னர் எங்களுடன் இணைந்து அந்த வேலையைச் செய்யுங்கள். அப்படி செய்யவில்லைஎன்றால்நீங்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிக்காகவும், சலுகைகளுக்காகவும் அரசாங்கத்தை விமர்சிப்பதாகவே நாங்கள் நினைப்போம். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சீமெந்து பதுக்கி வைப்பு; அதிகாரிகளால் மீட்பு

## வியாபார நிலையத்துக்கு சீல்




மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவில் சீமெந்து மூடைகளைபதுக்கிவைத்திருந்து அதிக விலைக்கு விற்பனை செய்த சில வர்த்தக நிலையங்களை நேற்று (திங்கட்கிழமை) மாலை முற்று கையிட்ட நுகர்வோர் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரிகள் சுமார் 800 இற்கு மேற்பட்ட சீமெந்துமூடைகளை மீட்டதுடன் அதை பொறிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்தனர்.

நுகர்வோர் அதிகார சபையின் கிழக்கு மாகாண உதவி பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தலைமையில் இந்த அதிரடி முற்றுகை நடவடிக்கை இடம் பெற்றது.

இதன் போது சீமெந்து மூடையில் பொறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு சீமெந்தை விற்பனை செய்த வர்த்தக நிலையங்களுக்கு சென்ற நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் குழு அங்கு சீமெந்து மூடைகளை மீட்டு அதில் பொறிக்கப்பட்ட விலைகளுக்கு அவ்விடத்திலேயே பொது மக்களுக்கு விற்பனை செய்தனர்.

இதன் போது சீமெந்து விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்று சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டதுடன் அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்த உரிமையாளர்கள் சிலருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் கிழக்கு மாகாண உதவி பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர்சதாத் தெரிவித்தார்.

சீமெந்து மூடைகள் அதில் பொறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தால் உடனடியாக நுகர்வோர் அதிகார சபைக்கு அறியத்தருமாறும் மேலும் அவர் தெரிவித்தார்.

# மட்டு.வானிலை அவதான நிலையம் மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு!



தற்போதுள்ள காலநிலை சில நாள்களுக்கு நீடிக்கும் எனவும் கரையோரப்பகுதிகளில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறும் இடிமின்னல் தாக்கங்களில் இருந்து அவதானமாக இருக்குமாறும் மட்டக்களப்பு வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

புத்தளம் தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்பில் காற்றின் வேகம் 50 தொடக்கம் 60கிலோமீற்றர் வரையில் காணப்படும் என வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி ரமேஸ் சுப்ரமணியம் தெரிவித்தார்.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. வடக்கு, வடமேல், மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரேலியா மாவட்டங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மிக பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் மாத்தளை, பொலன்னறுவை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழைபெய்யும் சந்தர்ப்பத்தில் பலத்த காற்றும் வீசும். இடிமின்னல் தாக்கங்களில் இருந்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் அடுத்த 24மணித்தியாலத்தில் குறைந்த காற்றமுத்த தாழ்வு பிரதேசம் வலுவடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மீனவர்களும் கடலில் பயணம் செய்வோரும் பயணம் செய்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். என்றார்.

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மட்டு.மாவட்டத்தில் வேலை நிறுத்தம்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார உத்தியோகத்தர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள வேலை நிறுத்தத்தில் மட்டக்களப்பு மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்துள்ளனர்.

இதனால் இந்த மாவட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அலுவலகங்கள் யாவும் முற்றாக மூடப்பட்டிருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் சுமார் 72 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடமை புரிகின்றனர். பொதுச் சுகாதாரப் பரி சோதகர்களின் வேலை நிறுத் தப் போராட்டம் காரணமாக கொரோனா தடுப்புதடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் உட்பட கொரோனா விழிப்பூட்டல் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளும் மாவட்டத்தில் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக இந்த மாவட்டத்தில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை மாவட்டத்தில் ஏனைய சுகாதார ஊழியர்களும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு பைஸர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற்களப் பணியாளர்களுக்கான பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கு பைஸர் தடுப்பூசியின் பூஸ்டர் ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.கலா ரஞ்சினியின் மேற்பாவையில் இந்தத் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. முதற்களப் பணியாளர்களாகக் கடமையாற்றும் வைத் தியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட ஊழியங்களுக்கும் இதன்போது முதல் கட்டமாக பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுவருவதாகவைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டு 6 மாதங்கள் பூர்த்தியாகிய உத்தியோகத் தர்களுக்கே இதன்போது பைஸர் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பைஸர்தடுப்பூசியின் பூஸ்டர் ஏற்றும் ஆரம்ப நிகழ்வில் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கே.கலாரஞ்சனி, பிரதான தாதிய உத்தியோகத்தர் நா.சசிகரன் உள்ளிட்ட வைத்தியசாலையின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.




# திருகோணமலையில் கடும் மழை பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற அடைமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள்டு வெள்ள நீரில் மூழ்கியுள்ளதால் அப் பிரதேச மக்கள் கடும் பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளனர்.

மாவட்டத்தின் கந்தளாய் முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், புல்மோட்டை, சூரியபுர, ஜயந்திபுர போன்ற பகுதிகளில் மழைநீர் அதிகரித்துக் காணப்படுவதோடு தாழ்நிலப் பகுதிகள் மற்றும் வீதிகளிலும் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. கடந்த மூன்று நாள்களாகத் தொடர்ச்சியாக இடை விடாத மழை பெய்து வருகின்றது. இதனால் வயல் நிலங்கள், பள்ளப்பகுதிகள் போன்றனநீரில்மூழ்கிக் காணப்படுகின்றன.

இதேவேளை கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேராறு பகுதியில் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் 8 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளார்கள் எனத் தெரிய வருகின்றது

# இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து ரவிசாஸ்திரி விடைபெற்றார்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் ரவிசாஸ்திரி 2017 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பொறுப்பு ஏற்றார். 2019 ஆம் ஆண்டில் அவரது பதவிக் காலம் மேலும் 2 ஆண்டுகள் நீடிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்திய அணியுடனான அவரது 4 ஆண்டு கால பயிற்சியாளர் பயணம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது. ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நமீபியாவுக்கு எதிரான ஆட்டமே அவரது பயிற்சியின் கீழ் இந்தியா விளையாடிய இறுதிப்போட்டியாகும். இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக மற்றொரு முன்னாள் அணித்தலைவர் ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் வருகின்ற 17 ஆம் திகதி தொடங்கவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து தனது பணியை ஆரம்பிக்கிறார்.

59 வயதான ரவி சாஸ்திரியின் பயிற்சியில் இந்திய அணி எந்த ஐ.சி.சி. கிண்ணத்தையும் வெல்லவில்லை. 2021 ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் நியூசிலாந்திடம் இந்தியா தோற்றது. 2019 ஆம் ஆண்டு 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியோடு வெளியேறியது. இந்தமுறை ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியைக் கூட எட்டவில்லை.

அதே சமயம் அவரது பயிற்சியின் கீழ் டெஸ்ட் போட்டிகளில் இந்தியா மகத்தான எழுச்சி பெற்றது. ஆஸ்திரேலிய மண்ணில் இரண்டு முறை டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி, இதுவரை எந்த ஆசிய அணியும் செய்யாத வரலாற்றுச் சாதனையை இந்தியா நிகழ்த்தியது. 42 மாதங்கள் டெஸ்ட் தரவரிசையில் இந்தியா முதலிடத்துக்கான அரியணையை வகித்தது. அவரது பயிற்சியில் இந்திய அணி 43 டெஸ்களில் விளையாடி 25 இல் வெற்றி பெற்றது.

ஒருநாள் போட்டிகளிலும் இந்திய அணி பல தொடர்களைக் கைப்பற்றியதோடு பல புதிய திறமையான வீரர்களையும் அணிக்குள் உள்வாங்கியது. ரவி சாஸ்திரியின் பயிற்சிக்காலத்தில் 76 ஒரு நாள் போட்டிகளில் ஆடிய இந்திய அணி 51 இல் வெற்றிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விடைபெற்றாலும் அடுத்து அவர் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் புதிதாக உருவாகியுள்ள அகமதாபாத் அணியின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்பார் என்று தெரிகிறது.




# கிறிஸ்கெய்லின் ஆறு ஆண்டு கால சாதனையை முறியடித்த ரிஸ்வான்

ரி-20 போட்டிகளில் ஓராண்டில் அதிக ஓட்டங்களை எடுத்திருக்கும் சாதனையை பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மொஹமட் ரிஸ்வான் தன்வசப்படுத்தினார். நடைபெற்றுவரும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் ஸ்காட்லாந்துக்கு எதிரான போட்டியில் அந்த இன்னிங்ஸில் தனது ஐந்தாவது ஓட்டத்தை எடுத்தபோது மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெய்லின் வசம் ஆறு ஆண்டுகளாக இருந்த சாதனையை அவர் முறியடித்தார்.

2015 ஆம் ஆண்டு 36 போட்டிகளில், 59.46 என்ற சராசரியில் 3 சதங்களும் 10 அரைச் சதங்களும் உள்ளடங்கலாக 1,665 ஓட்டங்களைக் குவித்திருந்தார் கிறிஸ் கெய்ல். அவரது 6 ஆண்டு காலமாக முறியடிக்கப்படாத சாதனையை இப்போது மொஹமட் ரிஸ்வான் தனதாக்கிக் கொண்டுள்ளார். தற்போதுவரை 1,676 ஓட்டங்களை எடுத்துள்ள அவர், இந்த எண்ணிக்கையில் ஒரு சதமும், 15 அரைச்சதங்களையும் அடித்திருக்கிறார். இந்த ரி-20 தொடரிலேயே இன்னும் இரண்டு போட்டிகளில் விளையாடக் கூடிய வாய்ப்பு பாகிஸ்தான் அணிக்கு இருப்பதால் இந்தச் சாதனையை மேலும் வலுப்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு அவருக்கு உள்ளது.

# 24 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாடவுள்ள ஆஸ்திரேலியா

சுமார் 24 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாட உள்ளது. இந்த சுற்றுப்பயணத்தில் மூன்று டெஸ்ட், மூன்று ஒருநாள் மற்றும் ஒரு ரி-20 போட்டிகளில் இரு அணிகளும் விளையாடவுள்ளன. கடைசியாக கடந்த 1998 இல் ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தானுக்கு சென்று விளையாடியிருந்தது.

அடுத்த ஆண்டு மார்ச் முதல் ஏப்ரல் வரையில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தானில் கிரிக்கெட் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது என்பதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ரமீஸ் ராஜா உறுதி செய்துள்ளார்.

மிகச்சிறப்பாக கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் ஒன்று ஆஸ்திரேலியா. அந்த அணி நீண்டகால இடைவெளிக்கு பிறகு பாகிஸ்தானில் விளையாட உள்ளமை ரசிகர்களுக்கு கிடைக்கவுள்ள விசேட விருந்தாகும். ஆஸ்திரேலிய வீரர்களுக்கு எங்களது நாட்டின் சிறந்த ஆடுகளங்களில் விளையாடும் வாய்ப்பு கிடைப்பதோடு எங்கள் நாட்டின் அன்பு, விருந்தோம்பல், கிரிக்கெட் விளையாட்டின் மீது நாங்கள் வைத்துள்ள மரியாதை என அனைத்தையும் இந்த சுற்றுப்பயணத்தின் மூலம் அறிந்து கொள்வார்கள். அவர்களுக்கு முந்தைய தலைமுறை ஆட்டக்காரர்கள் இவற்றைத் தவறவிட்ட நிலையில் நிச்சயம் இது அவர்களுக்கு ஒரு புதுவித அனுபவத்தை கொடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.




முன்னதாக நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகள் பாதுகாப்பு காரணங்களால் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தை கைவிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது

# ஆறுதல் வெற்றியுடன் ரி-20 உலகக்கிண்ண தொடரிலிருந்து வெளியேறியது இந்திய அணி

ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதி சூப்பர் 12 சுற்றின் போட்டியில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களால் நமீபியாவை வென்றது.

குழு 2 இற்கான இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நமீபியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 132 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. வீஸே 26 ஓட்டங்களையும் பார்ட் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.




இந்திய அணியின் பந்துவீச்சில், அஸ்வின் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பும்ரா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 133 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி, 15.2 ஓவர்களில் ஒரேயொரு விக்கெட்டை இழந்து வெற்றி பெற்றது.

ரோஹித் சர்மா 56 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களையும், சூர்யகுமார் யாதவ் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றனர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ரவீந்திர ஜடேஜா தெரிவுசெய்யப்பட்டார்.

# வவுனியா மாவட்ட இனப்பரம்பலை மாற்றும் முயற்சிக்கு எதிராக திங்களன்று நெடுங்கேணி நகரில் போராட்டம்

வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்றும் அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்தும் உரம் மற்றும் களைநாசினிகள் இன்மை, ஆசிரியர்களின் சம்பளமுரண்பாடு தீர்க்கப்படாமை, அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு , விலைவாசி உயர்வு போன்றவற்றைக் கண்டித்தும், எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நெடுங்கேணி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இவ்வாறு போராட்டத்தின் ஏற்பாட்டுக்குழு சார்பில் வவுனியா வடக்கு பிரதேசசபையின்தவிசாளர்தணிகாசலம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

வவுனியா மூன்று இன மக்களும் நீண்டகாலமாக வாழுகின்ற மாவட்டம். எமது மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதனூடாக இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாடு கடந்த காலங்களில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் வெற்றியும் கண்டுள்ளனர். 2010 ஆம் ஆண்டு வரை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார பிரதேசமாக இருந்தது.

அதன் பின்னர் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதி அனுராதபுர மாவட்டத்தின் கெப்பிட்டிகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவினால் நிர்வகிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியான கொக்கச்சான்குளம் 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களக்குடியேற்றம் செய்யப்பட்டு வவுனியா தெற்கு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையுடனும் இணைக்கப்பட்டது.

மஹிந்த ஆட்சிகாலத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்கு எல்லைப் பிரதேசத்தில் இலங்கையின் தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை குடியேற்றுவதற்காக யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் பூர்வீக மக்களது காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டமையுடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன. இதன் காரணமாக தமிழ் மக்கள் மட்டுமே வாழ்ந்துவந்த வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 361 குடும்பங்களை சேர்ந்த 1,169சிங்களமக்கள்வாழ்ந்துவருவதுடன் 26 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா வடக்கு பிரதேச சபையில் 10 சிங்கள உறுப்பினர்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 2014 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட மணலாறு பிரதேச செயலாளர் பிரிவின் (வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு) நிர்வாகத்தினுள் இருந்த 5 கிராம அலுவலர் பிரிவுகள்(4 உள்ளூராட்சி மன்ற வட்டாரங்கள்) கஜபாபுர, அத்தாவெட்டுனுவெவ, நிக்கவெவ, மொனராவெவ, கல்யாணபுரவின் ஒரு பகுதி ஆகியன வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டன. இருந்தபோதிலும் இன்றுவரை இப்பகுதிகள் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தினாலேயே நிர்வகிக்கப்படுகிறது.

இன்று எமது பாரம்பரிய பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளை வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான வேலைத்திட்டமானது மார்ச் மாதம் 2021 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் கொக்கச்சான் குள (போகஸ்வெவ) விஜயத்தின் பின்னர் எந்தவித கலந்துரையாடலுமின்றி பேரினவாதிகளால் மேற்கொள்ளப்படுகிறது. அனுராதபுர மாவட்ட நிர்வாகத்தில் உள்ள பதவியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கனகாவெவ ( 430 குடும்பங்கள்) மற்றும் கொரவப்பத்தான பிரதேச செயலாளர் பிரிவின் வெரகதென்ன, கம்பிலிவெவ ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை(600 குடும்பங்கள்) வவுனியாவடக்குபிரதேசசெயலாளர் பிரிவினுள் உள்வாங்குவதற்கான ஏற்பாடுகளை விரைவாக செயற்படுத்தி வருகின்றனர். இச்செயற்பாடானது மேலும் இனவிகிதாசாரத்தில் பாரிய மாற்றத்தை மிகத் துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகவே நோக்கவேண்டியுள்ளது.

யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கச்சல்சமளன்குளம் என்கின்ற குளத்தையும் அதற்கு மிக அருகில் இருந்த கைவிடப்பட்ட இன்னோர் குளத்தையும் இணைத்து பாரிய குளமாக மாற்றி நீர்பாசனக் காணிகளை 2 ஏக்கர் வீதம் பிரித்து, நூற்றிற்கு மேற்பட்ட தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களுக்கு வழங்குவதற்கு கடந்த ஆட்சிக்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது, எமது எதிர்ப்பினால் அச்செயற்பாடு கைவிடப்பட்டிருந்தாலும் தற்போது விவசாயக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு குடியேற்றம் நடைபெற்றுள்ளது. இக்குளத்தை புனரமைக்கும் செயற்பாட்டை வவுனியா அரசாங்க அதிபருக்கோ, கமநலசேவை திணைக்களத்திற்கோ தெரியாமல் அனுராதபுர மாவட்ட கமநலசேவை திணைக்களமே கையாண்டமை குறிப்பிடப்பட்டது. எமது நிலம் எம்மிடமிருந்து பலாத்காரமாகப் பறிக்கப்படுவதை நாம் அனைவரும் இணைந்து பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இன்று வவுனியாவை பூர்வீகமாகக் கொண்ட பலரும், யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியாவில் நிரந்தரமாக வசித்துவரும் பலரும், குறிப்பாக பல புதிய குடும்பங்கள், காணியில்லாமல் உள்ள நிலையில் எமது மாகாணத்தைச் சாராத வேறுமொழி பேசுகின்றவர்களை குடியேற்றுவதனூடாக மாவட்ட இன விகிதாசாரத்தை மாற்ற எடுத்துவரும் நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதோடு அச்செயற்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு அரசை கேட்டுக்கொள்கிறோம்.

இதேவேளை வனவள திணைக்களம், வனஜீவராசிகள் திணக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்றவை அடாத்தாக எமது மக்களின் பூர்வீக நிலத்தை தொடர்ச்சியாக அபகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதோடு வேறு மாகாணக் கிராமங்களை எமது மாவட்டத்துடன் இணைத்து எமது அடையாளத்தை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

எனவே இனப்பரம்பலை மாற்றும் அரசாங்கத்தின்செயற்பாட்டைகண்டித்தும் உரம் மற்றும் களைநாசினிகள் இன்மை, ஆசிரியர்களின் சம்பளமுரண்பாடு தீர்க்கப்படாமை, அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு போன்றவற்றைக் கண்டித்தும், எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நெடுங்கேணி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம் – என்றுள்ளது.



## நாட்டில் நிலவும் சீர்றந காலநிலை; பாதிப்பு 7 ஆயிரத்தைக் கடந்தது!




நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆயிரத்து 836 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 167 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, மாத்தளை, பதுளை, யாழ்ப்பாணம்,மன்னார், காலி, மாத்தறை, இரத்தினபுரி, குருணாகல், புத்தளம் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக 2 வீடுகள் முழுமையாகவும், 89 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.



## யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்துக்கு சுமந்திரனின் நிதியில் விளையாட்டு உபகரணங்கள்

*யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு சீருடை, வெற்றிக்கேடயங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் நேற்று (திங்கட்கிழமை) சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.*

*இந்த உபகரணங்களை நாடாளுமன்ற உறுப்பினரின் சார்பில் அவரின் வலிகாமம் பிரதிநிதியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதித் தலைவரும் வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளருமான தி.பிரகாஷ், வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் ஆகியோர் இணைந்து இளைஞர்கழக சம்மேளனத்தினரிடம் கையளித்தார்.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2021இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# வெள்ளத்தில் மிதக்கின்றது யாழ்.மாவட்டம்




யாழ்.மாவட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) இரவு தொடக்கம் தொடர்ந்து பெய்யும் அடைமழையால் யாழ்.நகரப்பகுதி வெள்ளத்தில் மிதக்கின்றது.














# வெள்ளத்தில் மிதக்கின்றது யாழ்.மாவட்டம்



யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம்











